[25th July 1964

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத்தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்தில் தயாரிக்கப்படும் பொருள்களைப் பிற மாநிலங்களில் விற்பனை செய்வதற்கு விற்பனை நிலையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றனவா? அப்படியானால், எத்தனை நிலையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: டெல்லியில் நாம் ஒரு நிலையத்தை அமைத்திருக்கிறோம். வேறு மாநிலங்களில் நாம் அமைக்கவில்லை.

திரு. மீ. கலியாணசுந்தரம்: விற்பனை நிலையங்கள் எந்த எந்த நகரங்களில் இருக்கின்றன? வருமானம் அவற்றை நிர்வகிப்பதற்குப் போதுமானதாக இருக்கிறதா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: ஏதோ ஒன்றைத் தவிர மற்றவை எல்லாம் லாபத்தில் நடக்கவில்லை. அதாவது, அதற்கான செலவு, ஓவர்ஹெட் எல்லாம் சரிக்கட்டுகிறதா என்றால், இல்லை. ஆனால், இவற்றை நாம் ஆரம்பித்ததன் நோக்கங்களில் விளம்பரமும் ஒன்று. நம்முடைய காட்டேஜ் இன்டஸ்ட்ரீஸ் போன்ற தொழில்களில் செய்கிற பண்டங்களை விற்பனை செய்வதற்கு எந்த விதமான வசதியும் இல்லை. அதனால், இந்தப் பொருள்களை விற்பனை செய்வதற்கு வசதி செய்து கொடுக்கவேண்டும் என்பதும் ஒரு நோக்கமாகும். 1963—64-ம் ஆண்டில் சுமார் 12 லட்ச ரூபாய் விற்பனை செய்யும் அளவு உயர்ந்திருக்கிறது. இந்த முயற்சி விளம்பரத்திற்காகச் செய்யப்படுகிறது.

குடிநீர்த் திட்டம்

* 729. கேள்வி.—**திரு. எல். ஆனந்தன்:** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கள்ளக்குறிச்சி வட்டத்திற்கு குடிநீர் திட்டம் வேண்டுமென்று நகரப் பஞ்சாயத்து கேட்டதன்பேரில் மதிப்பீடு தொகை தயார் செய்தும் இதுவரை வேலை துவங்காததன் காரணமென்ன?

கனம் திருமதி. ஜோதி வெங்கடாசலம் : பணமுடை காரணமாக கள்ளக்குறிச்சி நகரப்பஞ்சாயத்துக் குடிநீர்த் திட்டம் சம்பந்தமான பொது வேலைகளுக்கு அனுமதியளிப்பதை அரசாங்கம் தள்ளிப்போட்டுள்ளது.

* 730. கேள்வி—**திரு. எம். எஸ். மணி:**
திரு. மு. கருணாநிதி : } கனம் சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கோவை நகர குடிதண்ணீர் பற்றுக்குறையைப் போக்க சர்க்கார் அண்மையில் ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா?